



ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






வியாழன் ❖ அக்டோபர். 19, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 18 ❖ ரூ.10

சென்னை மற்றும் பிற மாநகராட்சிகளை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ள சிறு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு

# சலுகை

## பொது பயன்பாட்டுக்கான மின் கட்டணம், ஒரு யூனிட்டுக்கு ரூ.8-ல் இருந்து ரூ.5.50 ஆக குறைக்கப்படும் என்று கள ஆய்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்

**செங்கல்பட்டு, அக். 19-**
**சென்னை மற்றும் பிற மாநகராட்சிகளை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ள சிறு அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது பயன்பாட்டுக்கான மின் கட்டணம், ஒரு யூனிட்டுக்கு ரூ.8-ல் இருந்து ரூ.5.50 ஆக குறைக்கப்படும் என்று கள ஆய்வில் முதலமைச்சர் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**



இதுதொடர்பாகதமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்நேற்று (அக்.18) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில்,"கள ஆய்வில் முதலமைச்சர்"திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், முதல்வர் ஸ்டாலின் பேசியது: "இன்றைய ஆய்வுக்கூட்டத்தின்போது நாம் முக்கியமான திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்தோம். குறிப்பாக, மாநகராட்சி சாலைப் பணிகள், நகராட்சிகளில் மேற்கொள்ளப்படும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், புதியபேருந்துநிலையங்கள் அமைத்தல், பள்ளி செல்லாக் குழந்தைகளை பள்ளிக்கல்வித்துறைமூலம் கண்காணித்தல், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பணிகள் என பல்வேறு பணிகளைக்குறித்தும்நாம் ஆய்வு செய்தோம்.

இவ்வகை திட்டப்பணிகள் குறிப்பாக சாலைப் பணிகள், குடிநீர் திட்டங்கள், பாலங்கள், சமூகநலத் திட்டங்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றித் தருவது தான் நமது இலக்காக இருக்க வேண்டும். பெரும்பாலான பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டு வருவதை காண முடிந்தாலும், ஒருசில பணிகளில் தொய்வு இருந்ததையும் நாம் கவனித்தோம். அதற்கான விளக்கத்தையும், அது குறித்து என்ன செய்யப்படுகிறது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்களும் தெரிவித்தார்கள். அதன்படி நீங்கள் அனைத்து திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டங்களில் காலதாமதம் ஏற்படுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி நான் முந்தைய ஆய்வுக் கூட்டங்களில் தெரிவித்ததையே மீண்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால், அரசின் உட்கட்டமைப்பு பணிகள் பெரும் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப் படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்கப்படவேண்டும் என்பதை அந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு முன்பே முடிவு செய்கிறோம். உத்தேச பணி முடியும் நாட்களுக்குள் குறிப்பிட்ட பணி முடிவடையாதபோது திட்டத்துக்கான செலவு அதிகரிப்பதோடு, நிறைவேறாத பணிகளினால் அந்தப் பகுதி மக்கள் பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள்.

எனவே, எக்காரணம் கொண்டும் இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கட்டுமானப் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிவடைய வேண்டும் என்பது போல் நலத்திட்டங்களும், குறிப்பாக விளிம்பு நிலை, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் நலன் கருதி செயல்படுத்தப்படும் திட்டங்கள் எந்தவித குறைபாடுகளுமின்றி முழுமையாக குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

இந்த அரசு ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. எனவே, அனைத்து துறைத் தலைவர்களும் தங்கள் துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக இலக்கு மக்களின் குடும்பங்களை மேம்படுத்துவது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை கோரும் அனைத்து தரப்பு மக்களும் அதிக அளவில்

4ம் பக்கம் பார்க்க



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு சார்பில், தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தினை முன்னிட்டு, இரத்ததான கொடையாளர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா நேற்று கேடயங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு-நமச்சிவாயம் (அறந்தாங்கி), மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு மாவட்ட திட்ட மேலாளர் மரு.க.இளையராஜா, இரத்த வங்கி மருத்துவ அலுவலர் மரு.எஸ்.சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## ஜெகத்ரட்சகன் எம்.பி தொடர்புடைய இடங்களில் ரூ.32 கோடி ரொக்கம், ரூ.28 கோடி தங்கம் பறிமுதல்

### வருமானவரித் துறை தகவல்

**சென்னை , அக்.19-**
முன்னாள் மத்திய அமைச்சரும் திமுக எம்பியுமான ஜெகத்ரட்சகன் தொடர்புடைய இடங்களில் நடத்த சோதனையில் ரூ.400 கோடி மதிப்பிலான கணக்கில் வராத கட்டண ரசீதுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வருமான வரித் துறை தெரிவித்துள்ளது.



வருமான வரித் துறை இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சுமார் 100 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையில் கல்வி நிறுவனங்களில் வரி ஏய்ப்பு புகார்கள் கண்டறியப்பட்டுள்ளன. கல்லூரிகளில் இருந்து ரூ.400 கோடி மதிப்பிலான கணக்கில் வராத கட்டண ரசீதுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேபோல், தவறான தகவல்கள் அளித்து ரூ.25 கோடி ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டதற்கான ஆதாரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இன்னொருதேடுதலில் கல்வி நிறுவனங்களில் பயில மாணவர்களை ஈர்ப்பதற்காக ஏஜென்டுகள் பயன்படுத்தப்பட்டதும், இதற்காக கணக்கில் காட்டப்படாத கமிஷன் தொகை சுமார் ரூ.25 கோடி வசூல் செய்யப்பட்டதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மதுபான வணிகத்தில் போலி வரவு செலவு மூலம் ரூ.500 கோடி முறைகேடு செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

மேலும், கணக்கில் காட்டாத ரூ.300 கோடி, அறக்கட்டளைக வங்கி கணக்கில் இருந்து தனிப்பட்ட கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேசத்தில் ஒருதொழில்நிறுவனத்தை கையகப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட பணமும் இதில் அடங்கும். இதுவரை நடந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.32 கோடி ரொக்கமும். ரூ.28 கோடி மதிப்புள்ள தங்கமும் கைப்பற்றப் பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோதனை பின்னணி: அரக்கோணம் தொகுதி திமுக எம்.பி.யும், முன்னாள் மத்திய இணை அமைச்சருமான ஜெகத்ரட்சகன் தனக்கு சொந்தமான கல்வி, தொழில் நிறுவனங்கள் மூலம் ஈட்டிய வருவாயை முறையாக கணக்கு காட்டாமல், வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து, வருமானவரி புலனாய்வு பிரிவு அதிகாரிகள் ஜெகத்ரட்சகனுக்கு சொந்தமான இடங்கள், மகள், மருமகள், உறவினர்கள் தொடர்புடைய இடங்கள் என சுமார் 50 இடங்களில் கடந்த 5-ம் தேதி முதல் அடுத்தடுத்து சோதனை நடத்தினர். கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், மதுபான ஆலைகள், வீடுகள், நட்சத்திர விடுதிகள் என பல்வேறு இடங்களில் அடுத்தடுத்து சோதனை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் போது பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டு முறைகள்

### மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனிமேரி ஸ்வர்ணா தகவல்

**அரியலூர், அக்.19-**
அரியலூர் மாவட்டத்தில்,வடகிழக்கு பருவமழையானது வருகின்ற அக்டோபர் மாதம் 22ம் தேதி முதல் 25ம் தேதிக்குள் துவங்க உள்ளதால், கனமழையின் போது ஏற்படும் இடி மின்னல் மற்றும் வெள்ளத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள பின்வரும் வழிகாட்டுதல்களை பின்பற்றிட தெரிவிக்கப்படுகிறது.



இடி இடிக்கும் போது, அருகில் உள்ள காங்கிரீட் கட்டிடங்களுக்குள் செல்லவும் அல்லது கனத்த மேற்பகுதியுள்ள வாகனங்களுக்குள் சென்று ஜன்னல் கண்ணாடிகளை மூடிக்கொள்ளவும், தகரக்கூரை உடைய இடங்களை தவிர்க்கவும் வேண்டும். ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளிலிருந்து உடனடியாக வெளியேறவும், நீர் நிறைந்த வயல்வெளியில் வேலையிலிருந்தால், அருகிலுள்ள காய்ந்த நிலப்பரப்பிற்குசெல்லவும், குறைந்தபட்சம் வயல்வரப்பிற்காவது செல்லவும், வயலில் பாதுகாப்பான மறைவிடம் எதுவும் அருகில் இல்லையெனில், உயரமானபொருட்களுக்கு அருகிலோ, தனி மரங்களுக்கு அருகிலோ செல்லாமல் திறந்த வெளியில் இருந்திட வேண்டும்.

மறைவிடங்களற்ற திறந்தவெளியில் இருக்கும்படி நேர்ந்தால் கால்கள் இரண்டையும் மடக்கி குத்தவைத்து கரங்களால் கால்களை சுற்றி கைகளால் காதுகளை மூடி கண்களை மூடி, தலை கவிழ்ந்த நிலையில் அமர வேண்டும். மின்சாரம் கடத்த வாய்ப்புள்ள தளவாடங்களான, மின் கம்பிகள், தொலைபேசி கோபுரங்கள், காற்றாலை தகடுகள்,இரும்புவேலிகள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். இடி இடிக்கும் பொழுது குழுவாக இருக்க நேர்ந்தால் உடனடியாக பிரிந்து செல்ல வேண்டும், அறுந்து கிடக்கும் மின்கம்பிகளிடமிருந்து விலகியிருக்க வேண்டும்.

மேலும், வெள்ளம் ஏற்படும் நிகழ்வுகளின் போது, வானிலை குறித்த அண்மை செய்திகளுக்குவானொலி, தொலைக்காட்சி மற்றும் நாளேடுகளை கவனித்து வர வேண்டும். ஆடு, மாடு போன்ற வளர்ப்பு பிராணிகளை கட்டிப்போடாமல் வைத்திருக்கவும், அருகிலுள்ள முகாம்கள் / உயரமான இடங்களில் உள்ள வீடுகளுக்கு செல்லும் பாதுகாப்பான வழித்தடத்தை அறிந்து வைத்திருக்கவும் வேண்டும்.திடீர் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ள கால்வாய், ஓடை, வடிகால் பகுதிகளை தெரிந்து வைத்திருக்கவும், கழிவு நீர் வடிகால் பகுதிகள், நீர்ச்சந்திகள் முதலியவற்றிலிருந்து விலகியிருக்கவும், மின் கம்பங்கள், விழுந்து கிடக்கும் மின் கம்பிகள் முதலியவற்றிலிருந்து விலகியிருக்கவும் வேண்டும். வெள்ள நீரின் மீது நடக்கவோ, வாகனங்களை இயக்கவோ கூடாது.கொதிக்கவைத்த/ குளோரின் கலந்த நீரையே பருகவும் கிருமிநாசினியை தெளித்து சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருக்கவும் வேண்டும். வெள்ள நீரிலோ அல்லது அதன் அருகிலோ குழந்தைகளை விளையாட அனுமதிக்கக் கூடாது.

வடகிழக்கு பருவமழையின் போது பேரிடர் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் செயல்படக்கூடியபேரிடர் கால கட்டுப்பாட்டு மையத்தினை கட்டணமில்லா தொலைபேசி எண்.1077 மற்றும் 04329 228709 என்ற தொலைபேசி எண்ணிற்கும். வாட்ஸ்அப் மூலம் 9384056231 என்ற எண்ணிற்கும் பொதுமக்கள் தொடர்பு கொண்டு தகவல் / புகார் தெரிவித்திட மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோவை குண்டுவெடிப்பு வழக்கு: ஆயுள் தண்டனை கைதி பாஷாவுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி ஐகோர்ட் உத்தரவு

**சென்னை , அக். 19-**
கோவை குண்டுவெடிப்புவழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அல் - உம்மா அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.பாஷாவுக்கு மூன்று மாதம் காலம் இடைக்கால ஜாமீன் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த 1998-ம் ஆண்டு கோவைகுண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. இந்த வழக்கில் அல் உம்மா தலைவர் பாஷாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை முன்கூட்டியே விடுவிக்க கோரி அவரது மகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "29 ஆண்டுகளாக எனது தந்தை சிறையில் உள்ளார். குண்டுவெடிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட குறைவான தண்டனையை தனது தந்தை அனுபவித்துவிட்டார். இந்தநிலையில்,தற்போது ஆயுள் தண்டனையை மட்டுமே அனுபவித்து வருகிறார். எனவே, எனது தந்தையை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும். 85 வயது முதுமை மற்றும் அவரது உடல்நிலை காரணங்களை கருத்தில் கொண்டு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை, எனது தந்தைக்கு இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர், சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ராஜ்திலக் ஆஜராகி, இடைக்கால ஜாமீன் வழங்குவதில் அரசுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறினார். இதனையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதிகள், பாஷாவுக்கு மூன்று மாதங்களுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவிட்டனர். மேலும், இந்த மனுவுக்கு தமிழக அரசு பதிலளிக்கவும் உத்தரவிட்டுள்ளனர்.

# இன்று

19-10-2023

சோபகிருது ஐப்பசி 2 | OCT - THU வியாழன் | ரபிஉல்ஆகிர் 3 | இராசிபலன்

| நல்லநேரம் | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 10.45-11.45 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை - | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூரிய உதயம் : 6.04

மேஷம் - ஆதரவு, ரிஷபம் - ஊக்கம், மிதுனம் - ஆக்கம், கடகம் - தடங்கல், சிம்மம் - தாமதம், கன்னி - பொறுமை, துலாம் - நட்பு, விருச்சி - வெற்றி, தனுசு - புகழ், மகரம் - சாதனை, கும்பம் - சந்தோசம், மீனம் - நகை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன்னை தேவை இல்லை என்று வெறுத்தவருக்கு நீ எதை செய்தாலும் தவறாகவே தெரியும்..!

புதுக்கோட்டையின் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,560 | Rs. 6,030 |


# ஜெயங்கொண்டம் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கலைத்திறன் போட்டிகள்



அரியலூர்,அக்.19-

ஜெயங்கொண்டம் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றது, இது பற்றி புதுச்சாவடி நடுநிலைப்பள்ளி ஆசிரியர் செங்குட்டுவன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசின் முன்னோடி திட்டங்களில் ஒன்றான, மாணவர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தும் விதமாக, ஒருங்கிணைந்த பள்ளி திட்டத்தின் கீழ் கலைத்திருவிழா துவக்க விழா நடைபெற்றது.

மாவட்டத்திட்ட உதவி அலுவலர் பன்னீர்செல்வம் தலைமையேற்றார்.வட்டார கல்வி அலுவலர்கள் மதலைராஜ், ராசாத்தி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் கண்ணதாசன், அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் எழிலரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர், ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ரவிக்குமார் வரவேற்றார், கலைத் திருவிழா போட்டியானது 18-ம்தேதி தொடங்கி 21-ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளது.

மேல்நிலை, உயர் நிலை மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்கள்,தங்களுடைய திறமைகளை கவின் கலை, நுண்கலை ,இசை, கருவி இசை, நடனம் நாடகம் ,மொழிதிறன் ஆகிய வகையிலானபோட்டிகளில் நடைபெறுகிறது. அனைத்து வகைப்பள்ளி ஆசிரியர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர், அனைத்து வகை போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர்களாக ஆசிரியர் பயிற்றுநர்கள், குறிஞ்சிதேவி, ஜயப்பன் ,அந்தோணி சேவியர் ,சரவணன், இளையராஜா, கார்த்திகேயன், செந்தில், டேவிட் ஆரோக்கியராஜ், சுகன்யா , கணினி விவரப் பதிவாளர்சாந்தி ஆகியோர் செயல்படுகின்றனர்.

கலைத்திருவிழா ஆவண புகைப்பட பதிவாளராக புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் செங்குட்டுவன் செயல்படுகிறார், ஒன்றிய அளவில் வெற்றி பெறும் மாணவர்கள், மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள உள்ளனர். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்கள், தமிழக அரசின் சார்பில் வெளிநாட்டு கல்வி பயணம் அழைத்து செல்லப்படுவார்கள், துவக்க விழாவில் கலைப் பண்பாட்டு நிகழ்வின் வட்டார ஒருங்கிணைப்பாளர் தாமோதரன்நன்றிகூறினார்.

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளியில் கொலு வைத்து வழிபாடு



புதுக்கோட்டை,அக்.19-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வராமெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நவராத்திரி விழாவை முன்னிட்டு கொலு வைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு நாளும் மாலை வழிபாட்டு நிகழ்வில் மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விக் கடவுளை வணங்கி பாடல்கள் பாடுகின்றனர், அனைவருக்கும் பொங்கல் சுண்டல் பொறி பிரசாரங்கள் வழங்கப்படுகின்றன.

பள்ளியில் கொலு வைக்கும் நிகழ்வுக்கு வீடுகளிலிருந்து பெற்றோர்கள் ஏராளமான கடவுள் பொம்மைகளை கொடுத்துவிட்டனர், பத்து நாள் நிகழ்வில் ஒவ்வொரு நாளும் ஒரு ஆசிரியர் குழு பொறுப்பெடுத்துக்கொண்டு நவராத்திரி விழாவிற்கான ஏற்பாடுகளை செய்கின்றனர்,பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கொலு பற்றி பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி,கூறும்போதுகல்விக் கடவுள் சரஸ்வதியை வணங்குவதற்கு, கொண்டாடுவதற்கு பள்ளிக் கூடங்களைத் தவிர வேறு எந்த இடம் பொருத்தமாய் இருக்கும், ஆகவேதான் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக பள்ளியில் கொலு நிகழ்வை நடத்துகின்றோம்.

கொலுவிலுள்ள பொம்மைகளை மாணவர்கள் மகிழ்ந்து நோக்குகிறார்கள், கல்விக்கடவுளின் வரலாறுகளை ஆர்வமாய் கேட்டுத் தெரிந்து கொண்டனர், மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறம் ஒழுக்கம், நேர்மை, தூய்மை மனித நேயம் ஆகிய பெரிய பெரிய விசயங்களை இந்த கொலுவிலுள்ள சின்னச் சின்ன பொம்மைகள் உணர்த்தி விடுகின்றன என்று கூறினார்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

# மதுரையில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் மகளிர் திறன் மேன்பாடு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு

## அமைச்சர் கீதா ஜீவன் பங்கேற்பு



மதுரை, அக்.19-

பெண்கல்வியில்தமிழ்நாடு மாநிலம் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்பட்டு வருகிறது" என்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் கூறியுள்ளார்.

மதுரை பாத்திமா கல்லூரியில் கைம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை பாத்திமா கல்லூரி ஒருங்கிணைந்து கலைஞர் நூற்றாண்டுவிழா மற்றும் மகளிர் திறன் மேன்பாடு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இதில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தொடங்கி வைத்தனர். பின்னர் நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கீதா ஜீவன் பேசுகையில்,

பெண்களை தொழில் முனைவோராக உருவாக்கி பொருளாதார சுதந்திரம் பெற்றிடும் நோக்கில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் மானியத்துடன் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பெண்கள் தங்களது உடல் நலனையும், மனநலனையும் ஆரோக்கியமாக வைத்து கொள்ள வேண்டும், சமூகத்தில் ஏற்படும் போட்டிகளை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும், சிறு தோல்விகளுக்கு துவண்டு விடாமல் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும்" என்று அமைச்சர் கீதா ஜீவன் கூறினார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெ.குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, கைம் பெண்கள் மற்றும் ஆதவற்ற மகளிர் நல வாரிய உறுப்பினர் ரேவதி அழகர்சாமி, துணை மேயர் தி.நாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# விபத்தில்லா 23அரசு பேருந்து ஓட்டுநர்களுக்கு விருது வழங்கும் விழா மற்றும் இலவச மருத்துவம் மற்றும் ஆலோசனை வழங்கும் முகாம்



புதுக்கோட்டை, அக்.19-

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கம், புதுக்கோட்டை ரோட்டரி சங்கம், புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்கம், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் மற்றும் துரைசாமி நர்சிங் ஹோம் இணைந்து நடத்தும் விபத்தில்லா 23அரசு பேருந்து ஓட்டுநர்களுக்கு விருது வழங்கும் விழா மற்றும் இலவச மருத்துவம் மற்றும் ஆலோசனை வழங்கும் முகாம் புதுக்கோட்டை ரோட்டரி சங்கத் தலைவர் ராஜா முஹம்மது தலைமையில் அரசு போக்குவரத்துக் கழகம் புதுக்கோட்டை நகர் மற்றும் புறநகர் பணிமனை வளாகத்தில் நடைபெற்றது.

முன்னதாக வருகை தந்த அனைவரையும் புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்கத் தலைவர் கருணைசெல்வி வரவேற்றார் ரோட்டரி பிரார்த்தனையை புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் அசோகன் வாசித்தார், புதுக்கோட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலக நேர்முக உதவியாளர் நடராஜன், மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் ஜெயக்குமார், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கச் செயலாளர் இப்ராஹிம் பாபு, சேட் என்ற அப்துல் ரகுமான், பார்த்திபன் முன்னிலை வகித்தனர், புதுக்கோட்டை அரசு போக்குவரத்து கழக பொதுமேலாளர் இளங்கோவன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்,குழிப்பிறை ஊராட்சி மன்றத் தலைவர் அழகப்பன் சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தார், சர்க்கரை நோய் மற்றும் பாத பிரச்சனை சிறப்பு மருத்துவர் துரைநாகரத்தினம் முகாம் மருத்துவராக கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனை வழங்கி தந்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நகர காவல் துணை கண்காணிப்பாளர் ராகவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விபத்தில்லா 23அரசு பேருந்து ஓட்டுநர்களுக்கு மெடல் ,சான்றிதழ் மற்றும் விருது வழங்கி கௌரவம் செய்தார் நிறைவாக புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்கச் செயலாளர் சுகன்யா நன்றி கூறினார் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கச் செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், ஜான்சி ராணி ஆரவாமுதன், ஓம் ராஜ் பாரூக் ஜெய்லானி, ராமதாஸ், சங்கீதா, சலோமிலியோ, சித்ராதேவி கலந்து கொண்டனர் முருகேசன் திட்ட இயக்குனர்களாக கலந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர், நிறைவாக மகாராணி ரோட்டரி சங்கச் செயலாளர் சுகன்யா நன்றி கூற நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# புதுக்கோட்டை சங்கர மடத்தில் நவராத்திரி விழா



புதுக்கோட்டை,அக்.19-

புதுக்கோட்டை மேல 5-ம் வீதியில் திலகர் திடல் அருகில் உள்ள சங்கர மடத்தில் நவராத்திரியை முன்னிட்டு 34 ஆம் ஆண்டு ஸ்ரீ சாரதா நவராத்திரி விழா வெகுசிறப்பாகநடைபெற்றது நவராத்திரியின் 10நாட்களும் தினமும் காலையில்ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்று வருகிறது, தினமும் சகஸ்ர நாம பூஜை ஸ்ரீ லலிதா சகஸ்ர நாம அர்ச்சனைமற்றும்கன்னியா பூஜைசுகாசினிபூஜைதுர்கா சகஸ்ர பாராயணம் ஸ்ரீ லட்சுமிசகஸ்ரபாராயணம், ஸ்ரீ சரஸ்வதி சகஸ்ர பாராயணம் நடைபெற்று வருகின்றது.

மேலும் உற்சவர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆதிசங்கரருக்கும் மலர் அர்ச்சனை நடைபெற்றது நவராத்திரி கொலுவை முன்னிட்டு ஏராளமான பெண்கள்சிறுவர்கள்வருகை தந்து நவராத்திரியினை கண்டு மகிழ்ச்சி அடைகின்றனர், மேலும் பாராயணம்நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு வழிபாடு செய்கின்றனர், நவராத்திரியின் நிறைவு நாளான 24.10.2023 விஜயதசமி அன்று மாலை 6மணிக்கு ராஜராஜேஸ்வரி அம்பாள் ஊஞ்சலில் புஷ்ப அலங்காரத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது நவராத்திரி விழாவை ஸ்ரீ சங்கரமட நிர்வாக கமிட்டியாளர்கள் வெகு சிறப்புடன் நடத்துகின்றனர்.

# பெற்ற குழந்தைகளை தவிக்க விட்டு கள்ளக்காதலனுடன் கம்பிநீட்டிய மனைவி: கண்டுபிடித்து தரக்கோரி கணவன் தர்ணா

திருப்பத்தூர்,அக்.19-

திருப்பத்தூர் அருகே 2 குழந்தைகளுடன் தன்னை தவிக்க விட்டு, கள்ளக்காதலனுடன் மாயமான மனைவியை கண்டுபிடித்து தரக்கோரி, கணவர் தர்ணாவில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருப்பத்தூர் அடுத்த பொம்மிக்குப்பம் பழத்தோட்டம்பகுதியைச் சேர்ந்த மதன்குமார் என்பவருக்கும், பள்ளவள்ளி பகுதியைச் சேர்ந்த விஜயசாந்தி என்பவருக்கும் 7 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது, இவர்களுக்கு 7 மற்றும் 2 வயதில், இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் பள்ளவள்ளி பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் என்பவருக்கும் விஜயசாந்திக்கும்இடையே திருமணத்தை மீறிய உறவு இருந்ததாககூறப்படுகிறது, இதனை மதன்குமார் கண்டித்து வந்த போதும், அவர்கள் தங்கள் உறவை தொடர்ந்து உள்ளனர், இந்நிலையில் கடந்த 8ம் தேதி பிரபாகரனுடன் விஜயசாந்தி வீட்டை விட்டுவெளியேறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த மதன்குமார் கடந்த அக்டோபர் 9ம் தேதி, மனைவியை மீட்டு தரக்கோரி திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில்கணவர்புகார் அளித்துள்ளார், ஆனால் போலீஸார் புகாரின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது.

எனவேவீட்டைவிட்டு வெளியேறிய இருவரையும் தேடும்பணியில் மதன்குமாரும் அவரது உறவினர்களும் ஈடுபட்டுள்ளனர், இந்நிலையில் ஈரோடு, பெங்களூரு,வேளாங்கன்னி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தேடியும் கள்ளக்காதல் ஜோடி கிடைக்கவில்லை, மேலும் காவல்நிலையத்தில்புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை என மதன் குமார் தொடர்ந்து கவலையில் இருந்து வந்துள்ளார், இந்நிலையில்போலீஸாரை கண்டித்து உறவினர்கள் 10க்கும்மேற்பட்டோருடன், மதன்குமார், திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம் முன்பு திடீரென தர்ணாவில் ஈடுபட்டார்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த துணை காவல்கண்காணிப்பாளர் செந்தில்குமார், விஜயசாந்தியை மீட்டு தர உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார், இதன் பேரில் அனைவரும் கலைந்து சென்றனர், இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கள்ளக்குறிச்சி அருகே நிதி நிறுவனம் நடத்தி சுமார் 100 கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி



கள்ளக்குறிச்சி, அக்.19_

கள்ளக்குறிச்சி அருகே நிதி நிறுவனம் நடத்தி சுமார் 100 கோடி ரூபாய்க்கும் மேல் சுருட்டி கொண்டு தலைமறைவாக இருந்தவனை பணத்தை கொடுத்து ஏமாந்தவர்கள் சென்னையில் தேடி கண்டுபிடித்து தூக்கி வந்து பணத்தை கேட்டு வந்த நிலையில், இதனை அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து அந்த நபரை பொதுமக்களிடமிருந்து மீட்டு விசாரணை நடத்தி வருகின்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வட்டம் மூரார்பாளையம் என்ற கிராமத்தில் ஆட்டோ ஓட்டி வந்தவன் சமீர் அகமது(36) என்ற இளைஞன். திடீரென அந்த இளைஞன் சமீர் அகமது தனது கிராமத்தில் சமீர் குரூப் ஆஃப் கம்பெனி என்ற பெயரில் நிதி நிறுவனம் ஒன்றை துவங்கியுள்ளான், இந்த நிதி நிறுவனத்தில் 1 லட்சம் ரூபாய் செலுத்தினால் ஒரு வருடத்திற்கு மாதம் 14 ஆயிரம் வீதம் பணம் தருவது, 12 லட்சம் ரூபாய் கட்டினால் ஒரு வருடத்தில் 24 லட்சம் ரூபாய் மதிப்பில் வீடு கட்டி தருவது போன்ற கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து பொதுமக்களிடம் பணம் வசூல் செய்துள்ளான், அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள ஏராளமான கிராமங்களை சேர்ந்த சுமார் 2000 த்ததிற்கும் மேற்பட்டோர் இந்த சமீர்அகமது விடம் பணம் கட்டி வந்துள்ளனர்.

சமீர் அகமதுவின் நிதி நிறுவனத் திட்டத்திற்கு பலர் ஏஜெண்டுகளாகவும் செயல்பட்டு வந்துள்ளனர், அந்த வகையில் சமீர் அகமதுவிடும் சுமார் 100 கோடி ரூபாய்க்கும் மேலாக பணம் குவிந்துள்ளது, முதலில் சிலருக்கு முறையாக பணத்தை அளித்து வந்த சமீர் அகமது, ஓராண்டுக்கும் மேலாக பணத்தை வசூலித்த சமீர் அகமது அங்கிருந்து தலைமறைவாகி உள்ளான், பணத்தை கொடுத்து ஏமாந்தவர்கள் சமீர் அகமது எங்கே இருக்கிறான் என்று தெரியாமல் தவித்து வந்த நிலையில், அந்த முரார்பாளையத்து கிராமத்தினர் சமீர்அகமது சென்னையில் ஈசிஆர் சாலையில் இருப்பதை கண்டுபிடித்தனர், பலமுறை சென்று கிராமத்தினர் பணத்தை கேட்டு அந்த நிலையில், பணத்தை இப்போது தருகிறேன் பிறகு தருகிறேன் என ஏமாற்றி வந்துள்ளான், வழக்கம்போல் நேற்று சென்னை சென்ற கிராமத்தினர் சமீர் அகமதுவை அங்கேயே மடக்கி பிடித்து மேற்கொண்டு தங்கள் ஊரிலிருந்து ஆட்களை சென்னைக்கு வரவழைத்து சமீர் அகமதுவை காரில் தூக்கி போட்டுக்கொண்டு முரார்பாளையம் கிராமத்திற்கு வந்தனர், இங்கு வந்து ஒரு தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து பணத்தை கொடுத்து ஏமாந்தவர்கள் ஏராளமானோர் ஒன்று கூடி சமீர் அகமதுவை நன்கு கவனித்து பணத்தைக் கேட்டுள்ளனர், இதற்கிடையில் சமீர் அகமது பொதுமக்களிடம் பிடிபட்ட சம்பவம் அவரது மனைவிக்கு தெரிந்த நிலையில் அவரது மனைவி போலீசாருக்கு தகவல் தந்திருக்கிறார், இதன்பிறகு கள்ளக்குறிச்சி டிஎஸ்பி ரமேஷ் மற்றும் அருகிலுள்ள சங்கராபுரம் காவல் நிலைய ஆய்வாளர் பாண்டியன் மற்றும் போலீசார் முரார்பாளையம் கிராமத்திற்கு வந்து அங்கு பொதுமக்கள் பிடியில் இருந்த சமீர் அகமதுவை மீட்டனர்.

பொதுமக்கள் குற்றவாளியை பிடித்து வைத்து தண்டிக்க கூடாது, காவல்துறையில் ஒப்படைக்க வேண்டும் நீங்களே தண்டித்தால் உங்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என பொதுமக்களை போலீசார் மிரட்டியுள்ளார்கள், சமீர் அகமதுவை போலீசார் சங்கராபுரம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல முற்பட்டபோது, அங்கிருந்து பொதுமக்கள் விடவில்லை, சமீர் அகமதுவை விட்டால் தங்களுக்கு பணம் வந்து சேராது என போலீசார் சமீர் அகமதுவை அழைத்து செல்வதை பொதுமக்கள் தடுத்து நிறுத்தினார்கள். இதனையடுத்து போலீசார் சமீர் அகமதுவை அதே இடத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்த சம்பவம் முரார்பாளையம் கிராமத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது, இந்த சமீர் அகமது ஊரில் பண வசூலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, நவீன சொகுசு கார்களிலும் விலை உயர்ந்த இருசக்கர வாகனங்களிலும் வலம் வந்து கொண்டு, தன்னிடம் பணியாற்ற வெளியூரிலிருந்து வரவழைக்கப்பட்ட சில அழகான பெண்களை உடன் வைத்துக் கொண்டு பொதுமக்களிடம் சீன் போட்டு வலம் வந்தான் என்றும் கூறுகின்றனர், பணத்தை ஏமாற்றிக் கொண்டு தலை மறைவான சமீர் அகமது மீண்டும் அதே மூரார் பாளையம் கிராம மக்களிடம் சிக்கிய பரபரப்பான சம்பவம் நடைபெற்றது.

பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்களிடம் ஆலோசனை கூறிய போலீசார் லட்சக்கணக்கில் பணத்தை கொடுத்து ஏமாந்தவர்கள் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்று மாவட்ட பொருளாதார குற்றப் பிரிவில் புகார் அளியுங்கள் என கூறினார்கள், அந்த வகையில் புகார் சென்றபின்னர் போலீசார் இந்த சமீர் அகமது மீது வழக்கு பதிவு செய்து மேற்கொண்டு விசாரணையை நடத்துவார்கள் என தெரிய வருகிறது, இந்த சம்பவம் முரார்பாளையம் கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பாலவாக்கத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு





ஊத்துக்கோட்டை, அக்19-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டார சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள்வளர்ச்சிப்பணிகள் சார்பில் பாலவாக்கத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில்,100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வெற்றிலை,பாக்கு,மஞ்சள் குங்குமம்,வளையல்,சேலை, இனிப்பு,காரம் உள்ளிட்ட சீர்வரிசை பொருட்களை வழங்கினர். இதன் பின்னர், அனைத்து தாய்மார்களுக்கும் ஐந்து வகையான சாதம்,வடை, பாயசம் உள்ளிட்ட உணவு பரிமாறப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி வட்டார திட்ட அலுவலர் வனிதாதேவி தலைமை தாங்கினார்.திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜே. மூர்த்தி,ஏ.வி.ராமமூர்த்தி,கே. வி.லோகேஷ், ஆ.சத்தியவேலு, எல்.எஸ்.சுரேஷ்,அபிராமி குமரவேல்,ஜெயலலிதா சசிதரன்,டாக்டர் சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு தமிழக அரசு பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து சிறப்பாக செய்து வருகிறது என பட்டியலிட்டு கூறினார்.

இதன் பின்னர்,கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். முன்னதாக அனைவரையும் வட்டார ஒருங்கிணைப்பாளர் துளசிராமன் வரவேற்றார். முடிவில்,மேற்பார்வையாளர் விஜயா நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில்,மேற்பார்வையாளர்கள் தனலட்சுமி, வினோதினி,மரகதம்,டீனா மற்றும் திமுக-வை சேர்ந்த மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகளில் கலந்து கொண்ட நியூ சங்கீத் பள்ளி மாணவர்கள் ஜவாஹிருல்லா 200 மீ ஓட்ட பந்தயத்தில் முதல் இடமும், 100 மீ ஓட்ட பந்தயத்தில் மூன்றாம் இடமும், 4×100 மீ தொடர் ஓட்டத்தில் முதல் இடமும் 4×400 மீ தொடர் ஓட்டத்தில் மூன்றாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள இருக்கின்ற மாணவர்களை மாவட்ட கல்வி அலுவலர் பாராட்டி பதக்கங்கள் அணிவித்து வாழ்த்தினார். அருகில் பள்ளியின் தாளாளர் ராமசாமி உள்ளார்.

# மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் விழிப்புணர்வு பேரணி



அன்னவாசல் , அக்.19-

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் வட்டார வளமையம்சார்பாகமாற்றுத்திறன் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு பேரணி அரசினர் மேல்நிலைப்பள்ளி அன்னவாசலில் தொடங்கி நடைபெற்றது.

பிறப்பிலிருந்து 18 வயது வரை உடைய மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவமதிப்பீட்டுமுகாம்இன்று அரசினர் மேல்நிலைப்பள்ளி அன்னவாசலில் நடைபெற இருக்கிறது.மருத்துவமதிப்பீட்டு முகாமிற்கான விழிப்புணர்வு பேரணியானது வட்டார கல்வி அலுவலர்கள் அலெக்சாண்டர் கலா செலின் தலைமை ஏற்று தொடங்கி வைக்க பள்ளி தலைமை ஆசிரியர் பவுல் ராஜ் வாழ்த்துரை வழங்க மாணவர்கள் விழிப்புணர்வு பதாகையில் ஏந்தி மருத்துவ முகாம் குறித்த கோஷத்துடன் பள்ளியிலிருந்து புறப்பட்ட பேரணியானது அரசு மருத்துவமனை கடைவீதி பேருந்து நிலையம் வழியாக இனிதே அரசு மேல்நிலைப் பள்ளியில் நிறைவு பெற்றது.

மருத்துவ முகாம் குறித்து வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி பேசுகையில், மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு வருடம் தோறும் நலத்திட்டங்களை பெற்றுத்தர நடத்தப்படும் மருத்துவ முகாமானது எல்லா மாற்றுத்திறன் குழந்தைகளும் பயன்படும் வகையில் அமைய நாம் முயற்சி எடுக்க வேண்டும். மருத்துவ முகாமிற்கு வரும் பெற்றோர்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஐந்து புகைப்படங்கள் கொண்டுவந்து தவறாது மருத்துவ முகாமில் கலந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

மேலும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இருந்து தேசிய தனித்துவ அடையாள அட்டைகள், மருத்துவ காப்பீடு மற்றும் ஆதார் பதிவேற்றம் செய்யப்படுவதால் அனைத்து குழந்தைகளும் பயன்பெற வேண்டும் என்றார். இந்த விழிப்புணர்வு பேரணியில் சிறப்பு பயிற்றுநர்கள் பாஸ்கர சேதுபதி, கலைச்செல்வி, ரூபா சந்திரா மற்றும் இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி ஆசிரியர்கள் மணி முத்து, முத்து லட்சுமி ஆகியோர் களப்பணியாற்றினார்கள். ஆசிரியர் பயிற்றுநர் கவிதா நன்றி கூறினார்.

# ஊத்துக்கோட்டை அருகே அருள்மிகு ஸ்ரீ ஆதி புவனேஸ்வரி உடனுறை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் சுவாமி திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



ஊத்துக்கோட்டை , அக்.19-

திருவள்ளூர்மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், சிறுவாபுரி அஞ்சல் ஆமிர்த நல்லூர் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ ஆதி புவனேஸ்வரி உடனுறை அருள்மிகு ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் சுவாமி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சியாகநடைபெற்றது.

அமிர்தநல்லூர் கிராமத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல்பழமை வாய்ந்த ஆலயமாகும் வயல்வெளியில் இந்த சுவாமிக்கு கிழக்கே வஞ்சட்டிஸ்ரீஅகஸ்தீஸ்வரர் பெருமானும் மேற்கே ஸ்ரீ அமிர்தலிங்கேஸ்வரரும் வடக்கிலே சிறுவாபுரி ஸ்ரீ முருகப்பெருமானும் தெற்கே மஞ்சக்கருணை நடு நாயகராக புதிதாக அருள் தரும் ஸ்ரீ ஆதி புவனேஸ்வரிஉடனுறைஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் சுவாமிக்கு கருவறை விமானமும் மகாகணபதி ஸ்ரீ வள்ளி தேவசேன உடனுறை சுப்பிரமணியம் சுவாமி சுவாமி சண்டிகேஸ்வரர் தக்ஷிணாமூர்த்தி விஷ்ணு பிரம்மா பால விநாயகர் பாலமுருகன் நந்தியம்பெருமான் பலிபீடம் பரிவர்த்தன மூர்த்திகளுக்கும் மூர்த்திகளுக்கும்அனுஷம் நட்சத்திரம் சதுர்த்தி திதி சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் ஆலய நிர்வாகி மணி ஆலய விழா குழுவினர் சிறப்பான முறையில் கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

அமிர்த நல்லூர் கிராம பொதுமக்கள் ஏராளமானூர் கலந்து கொண்டு சாமி தரிசனம் தரிசனம்கசெய்தனர்.வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் நடைபெற்றது.



▶ சீர்காழி குடிமைப் பொருள் வழங்கல் தனி வட்டாட்சியராக ஆர்.முருகானந்தம் நேற்று பொறுப்பேற்றார். குடிமை பொருள் வழங்கல் வருவாய் ஆய்வாளர் பிரவீன் மற்றும் ஊழியர்கள் உடன் இருந்தனர்.



▶ சென்னை, வில்லிவாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளனூர் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவர் அ.பிரபாகரன் அக்டோபர் 16ல் பிறந்தநாள் காணும் அவரை ரிப்போர்ட்டர் செந்தில் மற்றும் உதய மலர் ஆசிரியர் ரமேஷ் அவரது இல்லத்தில் சந்தித்து சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# அதிமுகவின் 52 ஆம் ஆண்டு துவக்க விழா எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



செம்பனார்கோவில், அக். 19-

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 52 ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு தமிழ்நாடு புதுச்சேரி மாநிலங்களில் அதிமுகவினர் வெகு விமர்சையாக கொண்டாடினர்.


மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காளகஸ்திநாதபுரத்தில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம் ஜி ராமச்சந்திரனின் திருவுருவ சிலைக்கு மயிலாடுதுறை மாவட்ட அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் எஸ். பவுன்ராஜ் மாலையிட்டு மரியாதை செய்தார்.

அதைத்தொடர்ந்து செம்பனார்கோவில் மேல முக்கூட்டு கடைவீதியில் அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்த எம்ஜிஆரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கும், பேருந்து நிறுத்தத்தில் உள்ள பயணிகளுக்கும் அரசு பேருந்தில் சென்ற பயணிகள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மற்றும் அதிமுக தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கே.வி.ஜனார்த்தனன், செம்பனார்கோவில் தெற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் வி.ஜி.கண்ணன், தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.பி.பிரேம்குமார், எம்ஜிஆர் அணி மாவட்ட செயலாளர் நாஞ்சில் கார்த்தி உள்ளிட்ட அதிமுக நிர்வாக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# சீர்காழி அருகே இயங்கும் உணவகத்தின் பரோட்டாவில் பூரான் கிடந்ததால் அதிர்ச்சி : உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கடைக்கு சீல்





சீர்காழி, அக்,19

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த தருமகுளம் கடை வீதியில் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த நபர் ஸ்டார் ஸீ (Star Sea) உணவகம் என்ற பெயரில் அசைவ உணவகம் நடத்தி வருகிறார்.

இவரது கடையில் கீழப்பெரும்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி என்பவர் பரோட்டா வாங்கிச் சென்றுள்ளார். வீட்டில் குழந்தைகளுக்கு பரோட்டாவை பிரித்து கொடுத்த போது தான் அதிலிருந்த குருமாவில் பூரான் ஒன்று இறந்து கிடப்பது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த மூர்த்தி சம்பந்தப்பட்ட உணவகத்தின் உரிமையாளரிடம் கேட்டபோது அவர்கள் அலட்சியமாக பதில் அளித்துள்ளனர். இதுகுறித்துமூர்த்தி உணவு பாதுகாப்பு துறைக்கு புகார் அளித்ததார். அதன் பேரில் உணவகத்தை ஆய்வு செய்த உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் கவனக்குறைவாக செயல்பட்டதாக கூறி அபராதம் விதித்ததுடன் பராமரிப்பு இல்லாத கடையை முழுமையாக சீரமைத்து அதன் பின்னரே திறக்க வேண்டும் எனக் கூறி கடையையும் மூடி சென்றனர்.

இதனால் தருமகுளம் கடைவீதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# சீர்காழி அருகே புள்ளிமான் ஒன்று இறந்து கிடந்தது குறித்து வனத்துறையினர் விசாரணை



சீர்காழி,அக்,19

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகாவின் பல்வேறு இடங்களில் மான்கள் அதிக அளவில் கூட்டம் கூட்டமாக வசித்து வருகின்றன.

இதுபோல செம்பியன் வேலங்குடி பகுதியில் உள்ள கருவேலங்காட்டிலும் மான்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. இந்நிலையில் செம்பியன் வேலங்குடி பொறை வாய்க்கால் அருகே இரண்டரை அடி உயரமும், ஒரு மீட்டர் நீளமும் கொண்ட இரண்டரை வயதுடைய பெண் புள்ளிமான் ஒன்றுமுகத்தில் காயங்களுடன் இறந்து கிடந்தது.

தகவல் அறிந்த சீர்காழி வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தியதுடன், இறந்து கிடந்த புள்ளி மானின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சீர்காழி கால்நடை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த புள்ளிமான் நாய் துரத்தி முள்வேலியில் மோதிய அதிர்ச்சியில் இறந்திருக்கலாம் என கூறப்பட்டாலும், பிரேத பரிசோதனையின் முடிவிலேயே மான் இறப்பிற்கான முழுமையான காரணம் தெரிய வரும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பேச்சுப்போட்டி சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் பரிசுகளை வழங்கினர்



சீர்காழி, அக்,19-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூர் சீனிவாசா பாலிடெக்னிக் கல்லூரியில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட பொறியாளர் அணி சார்பாக மாவட்ட அளவிலான மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

இதில் 200 க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் வெற்றி பெற்ற மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, குத்தாலம் தாலுகாவிற்கு முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ மாணவிகளுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு தொகை, பதக்கம் மற்றும், சான்றிதழ்களை மாவட்ட செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகன் சிறப்புரையாற்றி மாணவருக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், மாவட்ட அமைப்பாளர் காழி. கலைவாணன், மற்றும் ஒன்றிய நகரசெயலாளர்கள் கொள்ளிடம் ஒன்றிய பெருந்தலைவர் சீர்காழி நகர பெருந்தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பாலவாக்கம் இந்தியன் வங்கியின் ஜன்னல் கம்பியை உடைத்து கொள்ளை அடிக்க முயற்சி




ஊத்துக்கோட்டை, அக்19-

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே பாலவாக்கம் பகுதியில் இந்தியன் வங்கி செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், இந்த வங்கியின் ஜன்னல் கம்பியை நள்ளிரவில் அறுத்து உள்ளே சென்ற முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் பணம் வைத்துள்ள லாக்கர் உடைக்க முயற்சி செய்துள்ளார். ஆனால், லாக்கர் பெட்டியை உடைக்க முடியவில்லை.இதனால் அவர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளார்.

காலைவழக்கம்போல் வங்கியை திறப்பதற்கு வங்கியின் மேலாளர் வைத்தியநாதன் வந்தபோது வங்கியின் ஜன்னல் கம்பி அறுக்கப்பட்டுஇருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இந்தக் கொள்ளைமுயற்சி குறித்து ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட மர்ம நபரை சிசிடிவி காட்சிகளைக்கொண்டு வலை வீசி தேடி வருகின்றனர். இச்சம்பவம்இப்பகுதியில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கலைமகள் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து கல்வி கடன் முகாம்



செம்பனார்கோயில், அக்.19-

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாபெரும் கல்வி கடன் முகாமில் 130 பயனாளிகளுக்கு ரூ.5.85 கோடி கடனுதவியை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி வழங்கினார்.

இம்முகாமினை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது: மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, மாவட்ட முன்னோடி வங்கியாக "இந்தியன் ஓவர்சிஸ் வங்கி" சிறந்த முறையில் செயல்;பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் கல்விக்கடன், தொழிற்கடன், சுய உதவிக் குழு கடன,; வீட்டுக்கடன் விவசாயக்கடன், தாட்கோக் கடனுதவி மாவட்ட தொழிற்மையத்துடன் இணைந்து தொழில் முனைவோருக்கு அண்ணல் அம்பேத்கர் தொழிற் கடனுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி என பல்வேறு திட்டங்களை மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

தமிழக அளவில் பல்வேறு கடனுதவிகளை வழங்குவதில் நமது மாவட்டம் முன்னோடியாக விளங்குகிறது. கடந்த நிதியாண்டில் அனைத்து கடனுதவி வழங்குவதிலும் இலக்கை தாண்டிய கடமுற்று வழங்கி நமது மாவட்டம் சாதனை படைத்துள்ளது மகளிர் சுய உதவிக் குழு கடனுதவி வழங்கி நமக்கு நமது மாவட்டம் சாதனை படைத்துள்ளது. மகளிர் சுய உதவிக்குழு கடனாக நமக்கு தரப்பட்டிருந்த ரூ.500 கோடிக்கு ரூ.502.34 கோடி கொடுத்துள்ளன. நமது மாவட்ட வங்கிகள் நமது மாவட்டத் தொழில் மையம் தமிழகத்தில் சிறந்த தொழில் மையமாக பல்வேறு விருதுகளை பெற்றுள்ளது.

நீட்ஸ் கடனுதவி திட்டம் அண்ணல் அம்பேத்கர் கடனுதவி திட்டம் ஆகிய திட்டங்களில் இந்த நிதியாண்டின் இலக்கை தற்போதே எட்டிவிட்டோம். மாற்றுத் திறனாளிகளுக்கான கடனுதவி வழங்குவதிலும், இலக்கைத் தாண்டிய கடனுதவி வழங்கியுள்ளோம். மயிலாடுதுறை மாவட்டத்தில் 2500 மாணவர்களுக்கு, கல்விக் கடனுதவி வழங்க இலக்கு தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்று முகாம் தொடங்கும் நேரத்தில் மட்டும் 130 பயனாளிகளுக்கு ரூ.5.85 கோடி கடனுதவியை அனைத்து வங்கிகளும் இணைந்து வழங்குகின்றன.

அனைத்து வங்கி சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட நிதியியல் கல்வி ஆலோசகர் மாவட்ட முன்னோடி வங்கி கே.ஸ்ரீனிவாசன், மாவட்ட முன்னோடி வங்கி அலுவலர் அருண் விக்னேஷ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எம்.முத்துசாமி, மயிலாடுதுறை பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் ராமநாதன், கலைமகள் கல்வி நிறுவனங்களின் நிறுவனர்கள் கே.நெடுஞ்செழியன், என். எஸ்.குடியரசு, கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மேகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செங்கோட்டை அரசு ஆண்கள் பள்ளிக்கு முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் தளவாடப் பொருட்கள் வழங்கல்



தென்காசி, அக்.19-

முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் தென்காசி மாவட்டம், செங்கோட்டை எஸ்.எம். எஸ்.எஸ் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 25 ஜோடி டெஸ்க்,பெஞ்ச் வழங்கப்பட்டது. ரூபாய் 2.5 லட்சம் மதிப்பிலான பலகை கொடுத்து உதவிய பண்டாரம் மற்றும் ஆசாரி கூலி வழங்க உதவிய திருநெல்வேலி குமாரசுவாமி ஆசிரியர் சண்முகசுந்தரம் மற்றும் பெயிண்ட்க்கு பணம் வழங்கிய ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் ஐயப்பன், தலைமை ஆசிரியர் சுந்தரகுமார் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் தலைவர் ஜவஹர்லால் நேரு, செயலாளர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர், பொருளாளர் ஆறுமுகம் செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமூலம், சண்முகையா நாராயணன், ராமசாமி, செண்பக குற்றாலம், ஜெயசந்திரன், சந்திரன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர், முடிவில் உதவி தலைமை ஆசிரியர் சிவசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# திருமயத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 52 ஆவது ஆண்டு விழா



திருமயம்,அக்.19-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 52 ஆவது ஆண்டு விழா ஒன்றிய பெருந்தலைவரும் ஒன்றிய செயலாளர் ஏ எல் ராமு தலைமையிலும், வடக்கு ஒன்றியச் செயலாளர் பி எல் ஆர் பழனிவேல் முன்னிலையிலும் நடைபெற்றது.

விழாவில் அதிமுக அலுவலகம் முன்பு கட்சி கொடி ஏற்றி முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் திருவுருவப்படம் புரட்சித்தலைவி அம்மா திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அதன் பின்பு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சி அடைந்தனர், விழாவில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற மாவட்டச் செயலாளர் லட்சுமணன் என்ற மணிகண்டன் ஒன்றியப் பொருளாளர் லட்சுமணன் ஒன்றிய எம்ஜிஆர் மன்றகோட்டை வெங்கட் அம்மா பேரவை ஒன்றிய துணைச் செயலாளர் மகா பாலு, ஒன்றிய சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் ஆரோக்கியராஜ் மற்றும் ஒன்றிய நகர கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகர் ராவ் காங்கிரஸை வெட்கமற்றவர்கள் என கடுமையாக விமர்சித்துள்ளார்

தெலங்கானா , அக்.19-

விவசாயிகளின் உரிமைகளை பறிக்கும் செயலில் ஈடுபடும் காங்கிரஸ் கட்சியினர் வெட்கமற்றவர்கள் என தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகர் ராவ் கடுமையாக விமர்சித்துள்ளார்.

தெலங்கானா மாநிலத்தில், விவசாயிகளுக்காக, நிலப்பதிவு, சொத்து மாற்றம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுக்காக கடந்த 2020ம் ஆண்டு ஆளும் பாரத் ராஷ்டிர சமிதி கட்சி சார்பில் தரணி போர்டல் என்ற தனி இணையதளம் துவங்கப்பட்டது. விவசாயிகளுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன. இந்நிலையில் தற்போது தெலங்கானா மாநிலத்திற்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த இணையதள விவகாரத்தை எதிர்க்கட்சிகள் தீவிரமாக கையில் எடுத்துள்ளன.

குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய மூத்த தலைவர் ராகுல் காந்தி மற்றும் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் அனுமுலா ரேவந்த் ரெட்டி ஆகியோர் காங்கிரஸ் கட்சி தெலங்கானாவில் ஆட்சிக்கு வந்தால் தரணி இணையதளத்தை வங்கக்கடலில் வீசுவோம் என தெரிவித்திருந்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சன்கோன் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முதலமைச்சர் சந்திரசேகர் ராவ், கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மேம்பாட்டுக்காக அரசு கொண்டு வந்த திட்டத்தை காங்கிரஸ் தூக்கி எறிவோம் என்று சொல்வதாகவும் அவர்கள் வெட்கமற்றவர்கள் எனவும் கடுமையாக விமர்சித்துள்ளார். மேலும் விவசாயிகளின் கைகளில் உரிமைகள் இருப்பதாகவும், தங்கள் கட்சி செய்தது, விவசாயிகளை மேம்படுத்துவதற்காகவே எனவும் அவர் தெரிவித்துள்ளார். தெலங்கானாவில் வருகிற நவம்பர் 30ம் தேதி மொத்தமுள்ள 118 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது, வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 3ம் தேதி நடைபெறுகிறது.

## காசா மருத்துவமனை மீது

# தாக்குதல் நடத்தியது இஸ்ரேல் அல்ல : ஜோ பைடன் பல்டி

அமெரிக்கா , அக்.19-

காசா மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியது இஸ்ரேல் அல்ல என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் 12-வது நாளாக தீவிரமடைந்துள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்று இஸ்ரேல் சென்றடைந்தார். விமான நிலையத்தில் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு நேரில் சென்று ஜோ பைடனை வரவேற்றார்.

பின்னர் இரு நாட்டு தலைவர்களும் சந்தித்துப் பேசினர். அப்போது காசா பகுதியில் நடத்தப்படும் தாக்குதல் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது. பின்னர் டெல் அவிவ் நகரில் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் செய்தியாளர்களை சந்தித்தார் ஜோ பைடன்.

அப்போது அவர், இஸ்ரேலின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என கூறியதோடு காஸா மருத்துவமனை மீதான தாக்குதல் பாலஸ்தீனத்தால் ஏவப்பட்ட ஏவுகணையால் தான் தவறுதலாக நிகழ்ந்திருக்கக்கூடும் எனும் இஸ்ரேலின் கூற்றையே ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அக்டோபர் 7 அன்று ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதல் கொடூரமானது என்றும், ஐ.எஸ் அமைப்பை விட அவர்கள் கொடூரமானவர்கள் என்றும் ஜோ பைடன் குற்றம் சாட்டினார். மேலும் அவர், காசா மருத்துவமனையில் நடத்தப்பட்ட தாக்குதல் தனக்கு மிகுந்த கவலையையும், கோபத்தையும் ஏற்படுத்தியாக தெரிவித்தார்.

உலக நாடுகளை கவலையில் ஆழ்த்தியுள்ள காசா மருத்துவமனை மீதான தாக்குதல், 'நான் பார்த்ததன் அடிப்படையில், அந்த தாக்குதலை நடத்தியது நீங்கள் அல்ல என்றே எனக்கு தோன்றுகிறது. எனவே நாம் நிறைய விஷயங்களைக்கடந்துவர வேண்டும்' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவிடம் கூறினார்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, ஹமாஸ் தாக்குதலின் போது 1,400 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர், பலி எண்ணிக்கை அதிகமாவும் இருக்க வாய்ப்புள்ளதாக செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். மேலும் அவர், இஸ்ரேலுக்கு ஆதரவும் தேவையான உதவிகளையும் வழங்கி வருவதற்காக பைடனுக்கு நன்றி கூறியதோடு, போரின் போது தங்களது நாட்டிற்கே வந்து ஆதரவு தெரிவித்த முதல் அமெரிக்க அதிபர் பைடன் தான் எனவும் தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி நகராட்சிக்கு உட்பட்ட, பழையபேட்டை, ஐஇஎல்சி நடுநிலைப்பள்ளி, காட்டிநாயனப் பள்ளி ஊராட்சி போகனப்பள்ளி நியாயவிலைக்கடை, அங்கன்வாடி மையம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதியை கலெக்டர் கே.எம். சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



சென்னை கிண்டியில் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் இன்னசென்ட் திவ்யா, முன்னிலையில் தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சஞ்சு தாமஸ் ஆபிரகாம் மற்றும் ரவுண்ட் டேபிள் இந்தியா நிறுவனத்தின் தலைவர் சுஜய் சுதர்ஷன் ஆகியோருடன் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. அதுல்யா சீனியர் கேர் நிர்வாக இயக்குநர் டாக்டர்.கார்த்திக் நாராயணன் உடனிருந்தார்.

# கந்தர்வகோட்டை அரசு பெண்கள் பள்ளியில் வட்டார அளவிலான கலைத்திருவிழா

## எம்.எல்.ஏ.சின்னதுரை தொடங்கி வைத்தார்



கந்தர்வகோட்டை, அக்.19-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கந்தர்வகோட்டை வட்டார அளவிலான கலைத்திருவிழாவை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னதுரை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கடந்த முறை நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது நுழைவாயில் அமைக்கப்படும் என்று தெரிவித்தேன்.

அதுபோல தற்போது நுழைவாயில் அமைத்து தரப்பட்டது. பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவிகள் பள்ளிக்கு வந்து செல்லும் வகையில் தரமான சாலை வசதிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் இப்பள்ளியின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் கந்தர்வகோட்டை சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்துபள்ளிகளுக்கும் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட தேவையான அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்கவே நான் என்னுடைய தொகுதி வளர்ச்சிநிதியை அதிகமாக ஒதுக்கியுள்ளேன் என்றும் இதன் மூலம் கந்தர்வகோட்டை சுற்று வட்டாரம் கல்வியிலும், கலையிலும் சிறப்பிடம் பெற்றுவிளங்கதொடர்ந்து உறுதுணையாக இருப்போம் என்றும் பேசினார்.

இந்நிகழ்வில் கந்தரவக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அமிர்தம்மாலதி தலைமை வகித்தார், உதவி தலைமை ஆசிரியர் ராஜலட்சுமி அனைவரையும் வரவேற்றார்,

வட்டாரக் கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி, நரசிம்மன், வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கந்தர்வக்கோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் ரெத்தினவேல் (எ) கார்த்திக் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர்கள் தியாகராஜன், பழனிவேல், ராமஜெயம், விஜயலெட்சுமி ஆசிரியர் பயிற்றுநர்கள் சுரேஷ்குமார், ராஜேஸ்வரி, பாரதிதாசன் ஆசிரியர்கள் மணிகண்டன், ரகமதுல்லா, ராஜமாணிக்கம், பாக்கியராஜ், தவச்செல்வம் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர், நிகழ்வை ஆசிரியர் பாரதிராஜா தொகுத்து வழங்கினார், நிறைவாக புதுநகர் தலைமை ஆசிரியர் அண்ணாத்துரை நன்றி கூறினார்.

## சலுகை... முதல் பக்க தொடர்ச்சி

பயன்பெறுவதை உறுதி செய்வது, முதல் தலைமுறை பட்டதாரிகள் சுயதொழில் தொடங்க கடனுதவி பெற வழிவகை செய்வது, போன்ற பலவழிகளிலும் ஏழை, எளிய மற்றும் விளிம்பு நிலை மக்கள் வாழ்வில் வளம்பெற நீங்கள் உதவமுடியும். பொதுமக்கள், குறிப்பாக ஏழை எளிய, நடுத்தர மக்கள் அரசு திட்டங்களின் பயனைப் பெறுவதோடு வழிகாட்டுதல்களையும் பெறவேண்டும்.

அதிலும் குறிப்பாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெறுவது, பள்ளி, கல்லூரி அளவில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல், அவர்களுக்கான கல்வி உதவித் தொகை பெறுவதையும், அவர்கள் வசிக்கும் அரசு மாணவர் விடுதிகள் முறையாக செயல்படுவதை உறுதி செய்வதையும் உங்கள் முக்கிய பணிகளில் ஒன்றாக நீங்கள் கருதவேண்டும். இந்த நல்ல தருணத்தில் நான் இரண்டு முக்கிய அறிவிப்புகளை இந்தக் கூட்டத்தின் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்;

முதலாவதாக, தென் சென்னைப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்த அரசு பதவி ஏற்றவுடன், ராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்பச் சாலையில் உள்ள பெருங்குடி கட்டணச் சாவடியில் சாலைப் பயன்பாட்டு கட்டணம் வசூல் செய்வது கைவிடப்பட்டது. இதனால், இப்பகுதி வழியாக செல்வோரும், தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிவோரும் பெரும் பயனடைந்தனர். தற்போது இந்த சாலையில் மெட்ரோ ரயில் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. இதனால் சாலையின் பல பகுதிகள் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதே சாலையில் நாவலூரில் உள்ள கட்டண சாவடியிலும் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்று, நாளை முதல் நாவலூர் கட்டண சாவடியிலும் கட்டணம் வசூலிப்பது நிறுத்தி வைக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மின் கட்டணம் குறைப்பு**

இரண்டாவதாக, சென்னை மாநகரம் மற்றும் பிற மாநகராட்சிகளை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் சிறு அடுக்குமாடிக் குடியிருப்புகள் (small apartments) உள்ளன. அண்மையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின்கட்டண முறையை மாற்றி அமைத்தபோது, இந்த குடியிருப்புகளின் பொது விளக்கு வசதிகள், நீர் இறைக்கும் மோட்டார்கள் போன்ற பொதுப் பயன்பாட்டு பணிகளுக்கான மின்கட்டணங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டண முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால் பொது வசதிகளுக்கான மின்சாரத்துக்கு ஒரு யூனிட்டுக்கு 8 ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டியுள்ளது.

இக்குடியிருப்புகளில் வசிக்கக்கூடிய நடுத்தர மக்களை இது பெரிதும் பாதிப்பதாக உள்ளது என்று பல்வேறு குடியிருப்போர் நலச்சங்கங்கள் தெரிவித்துள்ள அடிப்படையில், இதனை பரிசீலித்து, பத்து வீடுகள் அல்லது அதற்கு குறைவாகவும், மூன்று மாடிகள் அல்லது அதற்கு குறைவாகவும் உள்ள மின்தூக்கி வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு, பொதுப் பயன்பாட்டுக்கான புதிய சலுகைக் கட்டணமுறை ஒன்று நடைமுறைப் படுத்தப்படும். இதன்கீழ், பொதுப் பயன்பாட்டுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் 1 யூனிட்டுக்கு எட்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் 50 பைசாவாக குறையும். இதனால் மாநிலம் எங்கும் உள்ள சிறு குடியிருப்புகளில் வசிக்கும் நடுத்தர மக்கள் பயனடைவார்கள்.

மக்களுக்காக இயங்கும் இந்த அரசு அவர்களை நோக்கிச் செல்வதன் ஒரு முயற்சி தான் இந்த கள ஆய்வில் முதலமைச்சர் என்ற ஆய்வுக் கூட்டம். நேற்றைய தினம், பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் இந்த மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி நேரடியாக அறிந்து உங்களிடம் ஆலோசனை கூட்டம் நடத்தி இருப்பார்கள். அதன் அடிப்படையில், அரசின் திட்டங்கள் மேலும் செம்மைபடுத்தப்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் நீங்கள் அளித்த வாக்குறுதிகள் அவைகளை எல்லாம் நீங்கள் மேற்கொண்டு வரும் பணிகளை குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் சிறப்பாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு முக்கியமாக நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புவது, தினமும் குறிப்பாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காலை பத்திரிகைகளை படிக்கவேண்டும். ஊடகங்களை தொடர்ந்து நீங்கள் பார்க்கவேண்டும். அப்படி பார்த்தால்தான், நாட்டில் என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக உங்கள் மாவட்டத்தில் என்ன பிரச்சினை? என்பதை நீங்கள் உடனடியாக புரிந்துகொள்ள முடியும்.

அப்படி உங்களது மாவட்டங்களைப் பற்றி ஏதாவதுசெய்திகள் வந்தால், அந்த செய்திகளுக்கு உடனே பரிகாரம் காணவேண்டும். பரிகாரம் காண்பது மட்டுமல்ல, அது எந்தவகையில் பரிகாரம் காணப்பட்டிருக்கிறது என்பதை ஊடகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நீங்கள் தெரியப்படுத்த வேண்டும். அதை காலை முதல் duty-ஆக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கி, அரசின் திட்டங்களை, சேவைகளை அவர்களிடம் கொண்டு சேர்க்கும் உன்னத பணியினை தொடர்ந்து சிறப்பாக மேற்கொண்டு, அரசுக்கும் உங்கள் மாவட்ட நிர்வாகத்துக்கும் நல்ல பெயரை ஈட்டித் தரவேண்டும்" என்று முதல்வர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசு மீனவர்களை தாக்கும் கடற்கொள்ளையர்களை தடுக்க நடவடிக்கை எடுக்க தவறி விட்டது : ராமதாஸ் குற்றச்சாட்டு



சென்னை, அக்.19-

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதலைத் தடுக்கவும், அதன் பின்னணியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசு தவறி விட்டது. மீனவர்கள் தாக்கப்படும் போது மத்திய அரசுக்கு முதல்வர் எழுதும் வழக்கமான கடிதத்தைத் தாண்டி இந்த சிக்கலில் எந்த நடவடிக்கையும் இல்லை" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் தளப் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த வானவன்மகாதேவி கிராமத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் கோடியக்கரை அருகில் வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அவர்களைஇலங்கை கடற்கொள்ளையர்கள் சுற்றிவளைத்து கொடிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 9 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இரு படகுகள் சேதமடைந்திருக்கின்றன. அவர்களிடமிருந்து ரூ.5 லட்சம் மதிப்புள்ள மீன்பிடி கருவிகளும், பலநூறு கிலோ மீன்களும் கொள்ளையடிக் கப்பட்டுள்ளன. இலங்கை கடல் கொள்ளையர்களின் இந்த தாக்குதல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. குறைந்தது வாரத்துக்கு இரு முறையாவது தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். ஆனால், அதன் மீது மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. நாகை மாவட்ட கடலோரப் பகுதிகளில் தமிழக காவல்துறையின் கடலோரப் பாதுகாப்பு குழு செயல்பட்டு வரும் போதிலும், கடந்த சில மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் குறித்து இதுவரை எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை, மாநில அரசுக்கு எந்த அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை.

இலங்கை கடல் கொள்ளையர்களால் தமிழக மீனவர்கள் ஒவ்வொருமுறை தாக்கப்படும் போதும், கடற்கொள்ளையர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, அடையாளம் தெரியாதவர்கள் தாக்கியதாக வழக்குப் பதிவு செய்வதை மட்டும் தமிழக காவல்துறை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது. இந்த சிக்கலை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று, கடற்கொள்ளையர்களின் தாக்குதலைத் தடுக்கவும், அதன் பின்னணியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசு தவறி விட்டது, மீனவர்கள் தாக்கப்படும் போது மத்திய அரசுக்கு முதல்வர் எழுதும் வழக்கமான கடிதத்தைத் தாண்டி இந்த சிக்கலில் எந்த நடவடிக்கையும் இல்லை.

வங்கக் கடலில் அட்டகாசம் செய்யும் இலங்கை கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்களைத்தாக்கி பொருட்களை கொள்ளையடிப்பதற்காக இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட கூலிப்படையினர் ஆவர். அதில் சிங்களக் கடற்படையினரும் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகிறது. தொடர் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தமிழக மீனவர்களை வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செய்யாமல் தடுப்பது தான் இலங்கை அரசின் நோக்கம் ஆகும். இந்திய அரசு நினைத்தால் இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டகாசத்துக்கு ஒரு சில மணி நேரங்களில் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டகாசத்தை இனியும் வேடிக்கை பார்க்காமல், அவர்கள் மீது பன்னாட்டு கடல்பாதுகாப்பு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும். பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் இலங்கை கடற்கொள்ளையர்களை இண்டர்போல் எனப்படும் பன்னாட்டு காவல்துறை உதவியுடன் கைது செய்து தண்டிக்க தமிழக அரசும், தமிழக காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஜெகத்ரட்சகன் எம்.பி தொடர்புடைய இடங்களில் ரூ.32 கோடி ரொக்கம் பறிமுதல்

# கள்ளக்குறிச்சி: நிதி நிறுவனம் நடத்தி 100 கோடி மோசடி





# சீர்காழி : பரோட்டாவில் பூரான் கிடந்ததால் அதிர்ச்சி : உணவகத்திற்கு சீல்


| சென்னை / புதுக்கோட்டை | 19.10.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

19.10.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

வெ. இராமலிங்கம் பிள்ளை , நாமக்கல் கவிஞர் (பி.1888) (இ.1972)



மன்னை நாராயணசாமி , தமிழக அரசியல்வாதி (பி.1919)



ரா. தாமரைக்கனி , தமிழக அரசியல்வாதி (பி.1946) (இ.2005)



கு. ஞானசம்பந்தன் , தமிழகத் தமிழறிஞர், பேச்சாளர், எழுத்தாளர், நடிகர் (பி.1956)



## இன்றைய நினைவு நாள்

நிமலராஜன் , யாழ்ப்பாண பிபிசி செய்தியாளர் (இ.2000)



ஸ்ரீவித்யா , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1953) (இ.2006)



காக்கநாடன் , இந்திய எழுத்தாளர் (பி.1935) (இ.2011)

